# ‘விக்சித் பாரத்’ இலக்கை எட்ட தற்சார்பு அவசியம்

## பட்டமளிப்பு விழாவில் ஐ.ஐ.டி., இயக்குனர் பேச்சு

Dinamalar,dt:28.3.26,pg.no.6

கோவை, மார்ச் 28–

‘விக்சித் பாரத் 2047’ இலக்கை அடைந்து இந்தியா வல்லரசாக உருவெடுக்க, இளைஞர்கள் உள்நாட்டு பொருட்களை பயன்படுத்த முன்வர வேண்டும் என சென்னை ஐ.ஐ.டி., இயக்குனர் காமகோடி வலியுறுத்தினார்.

அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் 37வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று அவர் பேசியதாவது:

உலகளவில் 15 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் அதிக அளவில் உள்ள நாடு இந்தியா. ஆனால், பள்ளிக் கல்வி முடித்த பின் உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களின் சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 29 சதவீதமாக உள்ளது; தமிழகத்தில் இது 50 சதவீதத்துக்கும் மேல் உள்ளது. தேசிய கல்விக் கொள்கை 2035ம் ஆண்டுக்குள் இதை 50 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது.




■ அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் 37வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிய சென்னை ஐ.ஐ.டி., இயக்குனர் காமகோடி. அருகில் (இடமிருந்து) நிறுவனத்தின் துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர், அவிநாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மீனாட்சிசுந்தரம்.

பட்டம் பெறும் மாணவர்கள் தங்கள் கிராமப்புறத்தை சேர்ந்த அல்லது வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குறைந்தது இரண்டு மாணவர்களுக்கு உயர்கல்வி கிடைக்க வழி காட்ட வேண்டும். இந்த சங்கிலித்தொடர் முயற்சியை ஒவ்வொருவரும் முன்னெடுத்தால், அடுத்த 9 ஆண்டுகளில் நாடு முழுவதும் கல்வி வளர்ச்சி ஏற்படும்.

ஐ.டி., வேலைகளை மட்டும் இலக்காக கொள்ளாமல், பயின்ற பாடப்பிரிவுகளில் ஆழமான அறிவும் நிபுணத்துவமும் பெற வேண்டும். போர் போன்ற இக்கட்டான காலங்களில் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு நாம் பிற நாடுகளை சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இதை மாற்ற, அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தற்சார்பு அடைந்தாலே இந்தியா வல்லரசாக உருவாகும். இதையே பிரதமர் மோடி ‘விக்சித் பாரத் 2047’(வளர்ச்சியடைந்த இந்தியா) என்கிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

### 2,328 மாணவிகளுக்கு

இவ்விழாவில் 1,683 இளங்கலை, 538 முதுகலை மற்றும் 107 முனைவர் பட்டங்கள் என மொத்தம் 2,328 மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் அவிநாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மீனாட்சிசுந்தரம், துணை வேந்தர் பாரதி ஹரிசங்கர், பதிவாளர் இந்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.